எஸ்.ஷக்தி டி.நவீன் (வாசகர்)

# பிளசர் கார்!


மார்க் II

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட கார் என்ற பெருமை கொண்டது அம்பாஸடர். சாமான்ய மனிதன் முதல் நம் நாட்டின் பிரதமர் வரை அனைத்துத் தரப்பினரும் பயன்படுத்திய கார் இது மட்டுமே!

நம் நாட்டின் முன்னோடி ஆட்டோமொபைல் நிறுவனமான ஹிந்துஸ்தான் மோட்டார்ஸ் தான் அம்பாஸடரின் தாய். பிர்லா குழுமத்தைச் சேர்ந்த இந்த நிறுவனம், சுதந்திரத்துக்கு முன்பாகவே ஆரம்பிக்கப்பட்ட நிறுவனம்.

1942-ல், அதாவது எழுபது ஆண்டுகளுக்கு முன்பு இங்கிலாந்தைச் சேர்ந்த 'மோரிஸ் ஆக்ஸ்ஃபோர்டு' மாடல் கார்களை உதிரி பாகங்களாக வரவழைத்து, இங்கு அசெம்பிள் செய்து விற்பனை செய்து வந்தது ஹிந்துஸ்தான் நிறுவனம்.

மோரிஸ் ஆக்ஸ்ஃபோர்டு சீரிஸ் 2 மாடலின் அசெம்பிளி லைனை விலைக்கு வாங்கி வந்து, மேற்கு வங்கத்தில் உள்ள உத்தர்புராவில் 1954-ல் தொழிற்சாலையை நிறுவியது ஹிந்துஸ்தான் மோட்டார்ஸ். இங்குதான் முழுமையாக கார்களைத் தயாரித்தது. இதில், மோரிஸ் ஆக்ஸ்போஃர்டு சீரிஸ் 2 மாடல் காரின் வடிவத்தில் சிறிது மாற்றங்கள் செய்து, 'ஹிந்துஸ்தான் லேண்ட் மாஸ்டர்' தயாரித்தது. இதுதான் முழுமையான முதல் இந்திய கார் என்று சொல்லலாம்.

லேண்ட்மாஸ்டர் காரை முழுமையாக இந்தியச் சூழலுக்கு மாற்றினர். இதில், வெளிப்புற வடிவம், ஹெட் லைட் கவுல், புதிய டேஷ் போர்டு, ஸ்டீயரிங் மற்றும் பின்பக்க டெயில் லைட்டுக்கு பறவையின் இறக்கை போன்ற வடிவத்தையும் கொடுத்தனர். இந்தப் புதிய காருக்குத்தான் 'அம்பாஸடர்' என்று பெயர் சூட்டப்பட்டது. 1957-ல் சூட்டிய அம்பாஸடர் என்ற பெயர் இன்னும் தொடர்ந்துகொண்டு இருக்கிறது.

www.vikatan.com

# AMBASSADOR






நம்ம சூப்பர் ஸ்டாருக்கு அம்பாஸடர் மேல் செம கிரேஸ்!

- 'தி டைனோஸர் ஆன் இண்டியன் ரோட்ஸ்,' 'ஆம்பி' இதெல்லாம் அம்பாஸடருக்கான செல்லப் பெயர்கள். ஆனால், 'பிளசர் கார்' என்று இதைத்தான் குறிப்பிட்டார்கள் நம் நாட்டு மக்கள்.
- துவக்கத்தில் சைடு வால்வு இன்ஜினுடன் தயாரிக்கப்பட்டது. பிறகு, ஓவர்ஹெட் இன் ஜினுக்கு மாறியது அம்பாஸடர்.
- 1963-ல் அம்பாஸிடரின் முகப்புத் தோற்றத்தில் சின்னச் சின்ன மாற்றங்கள் செய்யப்பட்டு, அம்பாஸடர் மார்க் II என்ற பெயருடன் சந்தைக்கு வந்தது. 1975-ல் மேலும் சில மாற்றங்களுடன் வெளிவந்த மார்க் III தான் அம்பாஸடரின் மிக சிறந்த முகத் தோற்றமாக இன்றுவரை கருதப்படுகிறது.
- அம்பாஸடர் மார்க்-4தான் மார்க் சீரிஸின் கடைசி கார். அதன் பிறகு 1990-ல் வந்தது தான் நோவா.
- பிரபல ரீ-டிஸைனர் திலீப் சாப்ரியா அம்பாஸடர் காரை வைத்து 'ஆம்பிராட்' என்ற காரை உருவாக்கினார். பாலிவுட் நட்சத்திரங்கள் பல பேர் இந்த கார் மேல் பித்துப் பிடித்துத் திரிந்தனர்.
- இந்தியத் தயாரிப்பு, பாதுகாப்பு, விஸ்தாரமான இடவசதி உள்ளிட்ட பல காரணங்களால் இந்திய அரசுத் துறையின் பிரத்யேக வாகனமாக அம்பாஸடர் இன்றும் பயன் படுத்தப்படுகிறது.
- அரசு அதிகாரிகள், அரசியல்வாதிகள், சினிமா செலிபிரிட்டிகள் உள்ளிட்ட வி.ஐ.பி.க்கள் அந்தஸ்து அடிப்படையில் அம்பாஸடரை விரும்புகிறார்கள். நம்ம சூப்பர் ஸ்டாருக்கும் இந்த காரின் மேல் செம கிரேஸ்!
- ஜப்பான் இசூஸு நிறுவனத்துடன் இணைந்து, 1995-ல் புதிய பெட்ரோல் மற்றும் டீசல் இன்ஜின்களை இதில் 5 ஸ்பீடு ஃப்ளோர் ஷிஃப்ட் கியர் பாக்ஸ் அறிமுகம் செய்தது. மேலும், பக்கெட் சீட் இந்தச் சமயத்தில்தான் அறிமுகமானது. 1.8 லிட்டர் பெட்ரோல் இன்ஜின், அப்போது இருந்த கார்களில் அதிக திறன்கொண்டது இதுதான்.
- இந்திய வரலாற்றில் உற்பத்தியிலும், விற்பனையில் ஐம்பது ஆண்டுகள் தாண்டி இன்றும் விரும்பப்படும் காராக இருப்பது அம்பாஸடர் மட்டுமே!

www.vikatan.com